451

451
4-57

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம்

OFFICE OF THE REGISTRAR
16 NOV 1957
MADRAS



O22:38·2111
N57
182166

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி

சௌபாக்யவதி ஸ்ரீ எம். ஓ. அலமேலாவின் நினைவு மலர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ பார்த்தசாரதி மூவைந்துமணி மாலை.

திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கத்தின் கிளை

அம்பத்தூர் அறநெறி

அரங்க வெளியீடு—34

இது

ஸர்வமங்கள ஏவிளம்பி ஆண்டு ஸ்ரீ ஆண்டாள்
திருவவதார தினமாகிய திருவாடிப் பூரத்
திருநன்னாள் (30-7-1957) அன்று,
திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள திருவஹோபிலமடத்
திருநரசிங்கப் பெருமாள்
திருவடிகளில்
இடப்பெற்ற
காணிக்கை.

அரங்கக்காரியாலயம்:

ஸ்ரீரங்கவிலாஸம், ஸ்ரீ மௌந சுவாமிகள் மட்த்துத் தெரு,

அம்பத்தூர்.

30—7—1957.

ஸ்ரீ:

# முகவுரை.

காயாம்பூ மேனியனே காகுத்தா முன்னமரில்
மாயா வலம்பெற்ற வாளரக்கன்—ஓயா
எதிர்நிற்க நாளைவா வின்றுபோ வென்ற
அதிர்கழலா யென்னை யளி.

—(கோவலவெண்பா. புகார் காண்டம். கடவுள் வாழ்த்து)

செந்துவர்வா யிந்துமுகச் சீதைக்கா முந்தவையுள்
வெந்திறலார் மந்தரநேர் வின்முறித்த—எந்தலைவன்
செங்கமலத் தாள்பணிந்த சீரியர்க்கு முண்டுகொலோ
பைங்க ணமனுர் பயம்.

—(கோவல வெண்பா. மதுரைக்காண்டம். கடவுள் வாழ்த்து)

செந்தா மரைமுகமுஞ் செங்கனிவா யுங்கண்ணு
மந்தாம மார்பு மலர்மகளு—நந்தாத
மற்றேளுஞ் சேவடியு மாலருளா னுன்காணப்
பெற்றேனே லுற்றேனற் பேறு.

—(கோவல வெண்பா. வஞ்சிக்காண்டம். கடவுள் வாழ்த்து)

சீர் ஒன்று தூப்புல் திருவேங்கடமுடையான் சந்த மிகு தமிழ் மறையோன். அவர் பாடிய "திருச்சின்னமாலை" யில் கண்ணபிரானது அருமை பெருமைகளைத் தெளி விக்கும் சில திருநாமங்கள் அமைந்துள்ளன. அவை யாவன :— (1) பகல் நடுவே இரவுஅழைக்க வல்லார்; (2) தருமன்விடத் தாம்தூது போனார்; (3) தரணி பொருத் திண்பாரம் தவிர்த்தார்; (4) அருமறையின் பொருள் அனைத்தும் விரித்தார்; (5) 'அஞ்சினநீ என்னை அடை' என்றார்; (6) தருமம்எலாம் தாமாகி நிற்பார்; (7) தாமேநம் வினைஅனைத்தும் தவிர்ப்பார்; (8) 'பரம் எனது நீபுலம்பல்' என்றார்; (9) பார்த்தனுக்குத் தேரூர்ந் தார்; (10) வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார்; (11) மல்லர்மத கரிமாள மலைந்தார்; (12) கஞ்சனைப்போர் கடும் சினத்தால் கடிந்தார்; (13) கண்நுதல்முன் வாணன் தோள் கழித்தார்; (14) வெம்சொல்தர வீடுகொடுத்து உகந்தார்; (15) பஞ்சவரைப் பலவகையும் காத்தார்; (16) பாஞ்சாலி குழல்முடித்தார்.

தொண்டைமான் சக்ரவர்த்தியின் பிரார்த்தனைப் படியே திருவேங்கடமுடையான் கண்ணனாகத் தனது குடும்பத்தோடு சேவை சாதித்த திருப்பதியே திருவல்லிக் கேணி.

சென்னை ப்ரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. புன்னை மாடபூசி ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி "பார்த்த சாரதி பஞ்சரத்தினம்" இயற்றியுள்ளார். இதில் முதலாவது "செங்கமல மங்கையொடு" (1) என்று தொடங்கி "கால யவனற்கு" (5) என்று முற்றும். ஒவ்வொரு பாட்டின் ஈற்றடி "பத்மபவ பவதாத பாணித்ருத நவநீத பாண்டு சுத ரதசூ தனே" என மகுடமிட்டு வரும். இரண்டாவது ஆதியந்தப்பாக்கள் "கருமேனியழகு" (1) "முதிய வரவக் கொடி" என்று தொடங்குவதோடு பாட்டுத்தோறும் "வேணுயுத கரகமல விஜிதரிபு சயவிமல விஜயரத சூத மணியே" என்று பயின்று வரும் இறுதியடி. மூன்றாவது "கண்ணனே திருவலிக் கேணியுறை யண்ணனே காரி ஞெளி நிகர்வண் ணனே" என்று ஒவ்வொரு பாட்டும் முற்றும். இந்த ஐம்மணி முதற் பாவும் கடைசிப் பாட்டும் முறையே "உன்னுந்தி" "அமித எழில்" என்று ஆரம் பிக்கும்.

இந்நூலாசிரியர் இராமாநுஜாசாரியார் திருக்குமாரர் என்பது "செந்திருவாழ் கஞ்சஞ் செழுநீலம்-உந்துமணப், பூநிரைமா ருவயல்சூழ் புன்னையிரா மாநுசன்சேய்" (ஆக் கியோன் பெயர்) என்ற வெண்பாவால் அறிகின்றோம்.

இளங்கோவடிகள் இழைத்த சிலப்பதிகாரப் பெரு நூலைச் சுருக்கி பாலர் வருந்தாது உளங்கொள்ள "கோவல வெண்பா"ப் பாடியுள்ளார் புன்னை மாடபூசி ஸ்ரீநிவாஸாசாரியார். இவரது மாணக்கர் வை. மு. சடகோபராமாநுஜாசாரியர். இவர் பாடிய சிறப்புப்பாயிரம்,

"கோவலவெண் பாவினிது கூறினன் சென்னைநகர்
காவல்வா[illegible]டு கலாசாலைப்—பாவலவ
னுஞ்சீநி வாசனெனு மாரியர்சி காமணியாங்
காஞ்சீநி வாசனூல் கண்டு."

என்பது. விக்டோரியா மஹாராணியார் காலத்து இவர் சென்னை ப்ரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராய் விளங்கினர் என்பது இவர் தாமே

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
18/2/66
சென்னை 600 008

"அந்தணர்கள் வாழி யருமா மறைவாழி
செந்தமிழ்நூல் வாழி திருவாழி—தந்தமலே
மர்த்தித்த கண்ணனருள் வாழியர்நம் மாசக்ர
வர்த்திநிசெங் கோல்வாழி மன்.''

—(கோவலவெண்பா. வாழ்த்து. பக்கம் 62)

என்று பாடியிருத்தலால் வெளிப்படை.

இக் "கோவல வெண்பா" இறுதியில் "ஆக்கியோன் பெயர்" என்ற தலைப்பின் கீழ் பின்வரும் பாட்டு அச்சிடங் பெற்றுள்ளது.

"செங்குவளைத் தேன்பாய்ந்து செந்நெல் விளைகழனி
யெங்கும் பரந்த வெழிற்புன்னைத்—தங்கிய
சீனிவா சன்னெடுத்துச் செய்தான் பலகதையின்
பானிறைந்த கோவலவெண் பா."

மாடபூசி வித்வான் இயற்றிய, ஒரு காப்புச் செய்யுள் நீங்கலாக மூவைந்து பாக்களும் குறிப்புரையுடன் ஸ்ரீ "பார்த்தசாரதி மூவைந்து மணி மாலை" என்ற திருநாமத்தோடு "அம்பத்தூர் அறநெறி அரங்கம்'' என்ற ஸத்ஸங்க நற்சங்கத்தின் 34-ஆவதுவெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இம்மாலை தயாரிப்பில் உடனிருந்து உதவிய "ஸேவா" பத்திராதிபர் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் ஸ்வாமிக்கு எமதுநன்றி உரித்தாகுக.

"பக்தன்" ஆசிரியரும் உரிமையாளரும் ஆகிய ஸ்ரீமான் எம். ஓ. அழகியசிங்கராசாரி, பி.எஸ்.ஸி., பி.எல். யாரின் தர்மபத்நியான ஸ்ரீ எம். ஓ. அலமேலாவின் நினைவு மலராகத் திகழ்வதே இம்மாலையின் தனிச்சிறப்பு.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ஸ்ரீரங்கவிலாஸம்,
அம்பத்தூர்.
30—7—1957.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சென்னை ப்ரஸிடென்ஸி காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

**ஸ்ரீ. உ. வே.**

**புன்னை மாடபூசி ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி**

இயற்றிய

# பார்த்தசாரதி பஞ்சரத்னம்

## காப்பு.

### முதலாவது

பார்த்தனுக்குச் சாரதிமேற் பஞ்சரத்தி னஞ்செய்யக்
காத்திரள்க ளேறிக் கவிந்தபொழில்—போர்த்த
குருகையில்வாழ் மாறன் குரைகழலைப் போற்றின்
அருகெய்தா தோடு மவம்.

## நூல்.

செங்கமல மங்கையொடு சங்கவண னும்முரிய
சிறியவரு மருகார் தரத்
திருவலிக் கேணிதனில் வானவர்கள் வந்துபணி
செய்யமகிழ் வெய்தி யமரும்
துங்கநவ மாமணிகு யிற்றியொளிர் சன்னிதித்
துவாரவழி நின்று நின்னைத்
துதிசெய்து நிற்குமெனை யருள்செய்து வாவென்று
சொல்லிலுனக் கென்ன குறைவோ
மங்கள குணகர மனோஹர மஹாதீர
மாரசுகு மார வீர
மதிதவரு ஞலமஹி ரண்யஹர நரசிம்ஹ
மதுகைட போத்காடந
பங்கச பாபநிச யக்ஷாள நாம்புதர
பரமபுரு ஷாம ரேச
பத்மபவ பவதாத பாணித்ருத நவநீத
பாண்டுசுத ரதசூ தனே. (1)

எங்குமுனை வைதசிசு பாலற்கு நின்பாத
மீந்தனை யெதிர்த்து நின்றே
இணையற்ற பணநிரையி னுலைலறிந் தோற்குமுன
தெழின்மேனி தந்த ருளினை

பொங்குமணி யாட்டியுன் றிருநாம நாடாத
புல்லற்கு வீட ருளினே
புகழரிய நின்பாத மொருநாளு மகலாது
போற்றுமெனே யருளா ததேன்
சங்கதர சடகோப பரகால பரிபடித
ச்யாமள சரீர ராம
சசிதரணி நயநபுத சனவிநுத பதநளிந
சதமக மதச் சேதந
பங்கஜ தளாக்ஷபக நாசக கிரீந்த்ரகர
பாலித சமஸ்த புவந
பத்மபவ பவதாத பாணித்ருத நவநீத
பாண்டுசுத ரதசூ தனே. (2)

ஆசைவலே யுட்சிக்கி யாடுமென் னெஞ்சத்தி
னறியாமை நீக்கு வாயேல்
அனுதினமு முனதடியை மறவாத பத்திவரு
மைமபொறியின் மதம டங்கும்
மாசிலுன தடியார்க ளருள்செய்வ ரென்மீது
வல்வினைக ணீங்கி யகலும்
மன்னுமுய ருணர்வெய்து மலரினிடை யுறைகின்ற
மாமகளி னேக்கு வருமால்
ஈசகுல பதிமித்ர கம்புநிப கந்தரசு
கேதுதநு ஜாநா சந
கிரணமணி க்ருதஹார கம்பீர புஜகலித
கேயூர வேத சார
பாசதர சத்ருசாசு ராந்தக மஹாசூர
பரமகரு ணாசா கர
பத்மபவ பவதாத பாணித்ருத நவநீத
பாண்டுசுத ரதசூ தனே. (3)

முன்னமொரு வீடுமன் முனேந்துவரு சமரத்து
முனேவாளி யால டிப்ப
முககமல மலர்கருக நிகிலபுவ னமுமதிர
முடுகியொளி யாழி யேந்திச்
சொன்னசப தம்மழிய வன்னவனே மாய்க்கவரு
தோற்றமெளி யேன்காண நீ
தோற்றுவித் தனேயாகி ஞன்கண்டு கொண்டு பல
துதியோதி யுய்கு வன்காண்
உன்னத கதாஹஸ்த கோபிகா நந்தகர
வுத்தமோத் தமமா தவ

உத்துங்க பீஷ்மக சுதாகாந்த கோவிந்த
வுக்ரகம் ஸாசு ஹரண
பன்னகா திபசயந நாராய ணாநந்த
பலராம தேவா நுஜ
பத்மபவ பவதாத பாணித்ருத நவநீத
பாண்டுசுத ரதசூ தனே. (4)

காலயவ னற்குமிக வஞ்சியோ டினையென்று
கழறுகின் றனர றிவிலார்
கண்ணியா நோக்கினின் கழலிணையை மறவாத
கனமுடைய முசுகுந் தனின்
நீலநிற மணிமேனி கண்டுதொழ வேயெதிர்
நின்றனையெ னக்கொள் ளுவாம்
நின்பெருமை யுள்ளவண மறியவல் லாரிந்த
நீணிலத் தெவர றைகுவாய்
சீலகுண கணநாத சிகுரகுந் தளவாம
சேஷகரு டாபி வந்த
சீதகர முகசந்த்ர கீதோப தேசவா
சிஷ்யார்ய பததர்ச் சக
பாலகுல கோபால பக்தஜந மந்தார
பாரதச ஹாய சௌரே
பத்மபவ பவதாத பாணித்ருத நவநீத
பாண்டுசுத ரதசூ தனே. (5)

## இரண்டாவது

## வேறு மகுடம்

கருமேனி யழகழிய வருசிறுவ ரோடுபல
காடுமலை யின்பு றத்துக்
கன்றுநிரை மேய்க்கநீ சென்றபொழு தத்துனது
கழலிணையென் மீது படயான்
ஒருபெரிய கல்லாக மரமாக மடுவாக
வுற்றசிறு புல்லா கமுன்
உதித்திருந் தேனுகி லருநரகில் வீழ்க்குமிவ்
வுடலமெவ் வாறெய் துவேன்
குருவம்ச பவதுஷ்ட ந்ருபவம்ச பீதிகர
கோமள ரதாங்க பாணே
குமுகுமித ம்ருகமத படீரக்ருத லேபநர
கூத்தம கரீந்த்ர வரத

விருதகண் டாசஹித பசுரக்ஷ ணஸக்த
வேதாந்த சாஸ்த்ர வேத்ய
வேணுயுத கரகமல விஜிதரிபு சயவிமல
விஜயரத சூத மணியே. (1)

எந்தவுல குக்குமிறை யாகியுள நீமுன்ன
மெளியவோர் மாணி யாகி
ஏகிமா வலியெச்ச வாடத்து மூவடிம
ணேற்றனைய தன்றி யிரவி
மைந்தனிடை யந்தணவு ருக்கொண்டு சென்றுபின்
மாதான பலமேற் றனை
மாகாந்த ஞனவுனக் கேற்குமுறை யெவ்வாறு
வாய்த்ததோ யான றிகிலேன்
கந்தவஹ சுதவாஹ நாச்யுத ஹ்ருஷீகேச
கமநீய கோப வேஷ
காகுஸ்த்த வசுதேவ தேவகீ சுதரத்ந
கநகவஸ்த்ராலங் க்ருத
விந்த்யகிரி சத்ருசபுஜ யுகளப்ருந் தாரண்ய
மேதினீ ஸம்ஸ்த் தாபக
வேணுயுத கரகமல விஜிதரிபு சயவிமல
விஜயரத சூத மணியே. (2)

செகத்திலுட லோடுகாண் கின்றவுயிர் யாவுநீ
செய்தநன் றியைம றந்து
செருக்குற்று நின்றுதாஞ் செய்தொழில்கடம்முடைய
செய்கையென் றேநி னைந்து
திகைத்துமேற் றெய்வமிலே யென்றெண்ண மாயையாந்
திரையிட்டு வைத்தி ருத்தி
திருவுளமி ரங்கியத் திரைநீக்கி னவையுனைத்
தெரிசித்து வாழு மன்றோ
சுகநார தாதிமுநி சேவ்யவை குண்டேச
சுத்தசாத் விககே சவ
சூர்ப்பகா ராதிஜந காச்ருத ஜநாதார
சுபவிபீ ஷணபாந் தவ
விகசித மநோநளிந பாஸ்கர விஷட்கார
விஹகரத விச்வ மூர்த்தே
வேணுயுத கரகமல விஜிதரிபு சயவிமல
விஜயரத சூத மணியே. (3)

சொல்லா லுனைப்பாடி மகிழவறி யேன்சொன்ன
சொற்பொருளி னுண்மை யறியேன்

சோராம ணிற்கடிமை செய்யவறி யேன்பெரிய
சுருதியினை நோக்க வறியேன்
கல்லைநிகர் நெஞ்சினேன் பொய்களவு வஞ்சகங்
கனவிலுங் நீக்க வறியேன்
கடையினே னுயினுங் கடைக்கணித் தாளநின்
கருத்தினி னினைத் தருள்வாய்
பில்லாதி போல்லாச கரகோபீ காஜார
பீமாக்ர ஜாபி வாத்ய
பீதபாஞ் சாலபுத் ரீமாந தாபேத
பேதவாக் யார்த்த கதித
வில்லிபுத் தூர்விஷ்ணு சித்தநிச் சிததத்வ
விஹீதப்ரஹ் மாதி ரூப
வேணுயுத கரகமல விஜிதரிபு சயவிமல
விஜயரத சூத மணியே. (4)

மூதியவர வக்கொடிய துரியோ தனக்கொடிய
மூடன்கண் காண வவையின்
முன்னெய்தி மதியாது கொலவிட்ட வவணுற்ற
முனைவீரர் படவா னவர்
துதிபெற்ற புவனநிறை பெரியவுரு வத்தைநீ
தோற்றுவித் தனையென் மனத்
துன்பொழிய நின்சிறிய கரியவுரு வத்தையுட்
டோற்றுவிக் கின்மகிழ் வனே
மதுரம்ருது தரவசந நவநீத ததிசோர
மதுசூத நாதி கூர்ம
மதுரா புரீவாச மாநதந மாரமண
மாரீச நீசாந் தக
விதுரசுக்ரு தாதித்ய விப்ரதந தாநித்ய
விஷயாதி தூர கமந
வேணுயுத கரகமல விஜிதரிபு சயவிமல
விஜயரத சூத மணியே. (5)

## மூன்ருவது

## வேறு மருடம்

உன்னுந்தி மலர்வந்த நான்முகத் தொருவனே
யுன்பெருமை யறியா துனே
ஓரிடையன் மகனுக வுன்னீநீ காட்டகத்
தோடியனு தினமேய்த் திடும்

பொன்னினணி யிலகுமணி யாக்களையு மவைகள்பின்
போகுசிறு கன்று களையும்
போற்றிவரு கோபால பாலர்களை யுந்தனது
புணர்மாயை யாற்பி ணித்துப்
பன்னரிய பெரியமலை முழையொளித் திடவாய்ந்து
பார்த்தவைகள் போல வுருவம்
பலபல வெடுத்துநீ நிற்கவவ னுணிநின்
பதமலரி றைஞ்சி யஞ்சிக்
கன்னனிகர் வேதமொழி யாற்றுதிப் பக்கருணை
காட்டியறி யாமை யீர்ந்தாய்
கண்ணனே திருவலிக் கேணியுறை யண்ணனே
காரினெளி நிகர்வண் ணனே. (1)

வானிலுறை கின்றமதி செல்லவழி யின்மையால்
வாடிமே னிலை வாயிலில்
வந்துபுக நின்றகோ புரவகையு மணிதைத்த
வண்ணவான் கதவின் வகையும்
மானெரிய நீண்டுவளை தந்தமதி லின்வகையு
மாமணிக் கொடி யேறுறும்
மன்பெரிய தம்பமும் பொன்மண்ட பப்பொலிவு
மணநாறு பூஞ்சோ லையும்
மீனுலவு மினியபுன னிறைகுளனும் வாய்ந்தபேர்
மேன்மையுறு நின்னக ரில்வாழ்
மேதக்க வடியார்க ளடிபணியு மவர்பெருமை
வேதனு முரைக்க வலனே
கானனல முண்டகனி வாயனே மாயனே
கமலையுறை கின்ற மார்பா
கண்ணனே திருவலிக் கேணியுறை யண்ணனே
காரினெளி நிகர்வண் ணனே: (2)

கங்கையலை யெறிகின்ற கழலிணையி னழகுநின்
கரியதிரு மேனி யழகும்
கலைமதியை யொத்தவத னத்தினழ கும்பெரிய
கமலநிகர் விழியி னழகும்
சங்கமுறை தருகின்ற கையினழ குஞ்[illegible]
தலையரியும் வாட்கை யழகும்
தமநிய மலைக்குநிகர் தோளி[illegible] குந்தலையி
ருங்குமணி முடியி னழகும்
துங்கமலர் மகள்வாழு மார்[illegible] கும்மதிற்
ருேன்றுவன மாலை யழகும்



022:38·2111 N57
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008
182166

தூயநான் முகன்வந்த வுந்தியழ கும்பொலந்
தூசுபொலி யிடையி னழகும்
கங்குலும் பகலுமென் கண்ணைவிட் டகலாது
கருத்தினை யுருக்கு மன்றே
கண்ணனே திருவலிக் கேணியுறை யண்ணனே
காரினொளி நிகர்வண் ணனே. (3)

மிக்கபசி யால்வாடி யுணவினை விரும்பிமுன்
விடுப்பவொரு கோப னோடி
வேள்விசெயு மந்தணரை நாடியன் னங்கேட்ப
வெகுண்டவர் மறுப்ப வன்னோன்
இக்குநிகர் மொழிவரவ் வேதியரின் மனைவியரை
யேற்பவவ ருட்க ளித்தே
இணையற்ற வன்னமுத லர்யகைக் கொண்டெய்தி
யெம்பெரும நீகொள் கெனத்
தக்கவுப சாரத்தி னோடுனை யருத்திடத்
தளர்ச்சியற வுண்டு வந்து
தாழாத வர்க்கருள் செய்தந்த மங்கையர்
தம்பதிகள் செய்தொழி லினும்
கக்குமொளி மைக்குழ லவர்பத்தி யேமிகக்
கனமுடைய தெனநாட் டினை
கண்ணனே திருவலிக் கேணியுறை யண்ணனே
காரினொளி நிகர்வண் ணனே. (4)

அமிதவெழி லொழுகுமுக கோபியர்க டருகலவி
யார்ந்தக முவந்த நீமுன்
அம்மதுரை நகரினிட வதிகின்ற கூனியுட
லணை தந்த வாறென் னவும்
தமர்கண்மிக வினியசுவை தரவாங்கி யன்பினொடு
தந்தவுண வுண்டருளு நீ
தகுதியற வொருவறிய வந்தண னளித்தவவ
ருனுண்ட வாறென் னவும்
அமுதமொழி யுடையபல வாழ்வார்கள் செந்தமிழை
யாதரத் தொடுகொண் டநீ
அஞ்ஞானி யானவெளி யேன்சொன்ன புன்கவியை
யருள்செய்து கொளவேண் டுமால்
கமழுமண முடையதுள சீகார னேவிளவின்
கனிவீழ்த்த வொரு தீரனே
கண்ணனே திருவலிக் கேணியுறை யண்ணனே
காரினொளி நிகர்வண் ணனே. (5)

### ஆக்கியோன் பெயர்

குந்திமகன் சாரதிமேற் கூறினன் பஞ்சரத்நம்
செந்திருவாழ் கஞ்சஞ் செழுநீலம்—உந்துமணப்
பூநிரைமா ருவயல்சூழ் புன்னையிரா மாநுசன்சேய்
சீநிவா சன்விழைந்து தேர்ந்து.

ஸ்ரீ:

## பார்த்தசாரதி பஞ்சரத்நம்

## குறிப்புரை

### காப்பு

பார்த்தன்-அருச்சுனன்பெயர்களில்ஒன்று(பிரதை-குந்தி-யின் மகன்).பார்த்தசாரதி-அருச்சுனனுக்குப் பாரத யுத்தத்திற் சாரதியாயிருந்தவன்; கண்ணன்; திருவல்லிக்கேணியில் எழுந்தருளியுள்ள திருமாலின் திருநாமம். பஞ்சரத்னம்-ஐந்துமணிப் பாடல்கள். கா-பூந்தோட்டம்; சோலை. பொழில்-சோலை, நாடு, பூமி, பெருமை. குருகை-ஆழ்வார் திருநகரி. மாறன்-நம்மாழ்வார். குரைகழல்-ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடிகள். அருகு-சமீபம்; பக்கம்.எய்தாது-தோன்றாது. அவம்-பயனின்மை; வீண்.

### நூல்

### முதலாவது

(1) செங்கமலமங்கை-செந்தாமரைப்பொகுட்டிற்செம்மாந்து வீற்றிருக்கும்திருமாமகள். சங்கவணன்-பலராமன். உரியசிறியவர்-அநிருத்தன், ப்ரத்யும்நன், ஸாத்யகி. துங்க - உயர்வான. குயிற்றி-நெருக்கமாகப் பதித்து. ஒளிர்-பிரகாசிக்கின்ற. மங்கள குணகர-நற்குணங்களுக்கு இருப்பிடமானவனே. மநோஹர-மனத்தைக் கவருபவனே. மஹாதீர-மிகுந்த தைரியம் உள்ளவனே. மாரஸுகுமார-மன்மதன் போன்ற அழகு வாய்ந்தவனே. வீர-வீரனே. மதிதவருணலய-திருப்பாற் கடலைக் கடைந்து அருளியவனே. ஹிரண்யஹர-இரணியகசிபுவை அழித்தவனே. நரஸிம்ஹ-திருநரசிங்கப் பெருமானாய்த் தோன்றியவனே.மதுகைடபோத்காடந-மதுகைடபர்களைத்தொலைத்தவனே. பங்கச-திருவடிமுதல் திருவடிவரை கமலம்

போன்றவனே. பாப நிசயக்ஷாளநாம்புதர-பாபக்குவியலை கழுவுவதற்கேற்ற மேகம் போன்றவனே. பரமபுருஷ-புரம புருஷன் எனப்பேசநின்றவனே. அமரேச-அயர்வறு மமரர்கட்கு அதிபதியே. பத்மபவ பவதாத-நான்முக னுக்கும் சிவனுக்கும் தந்தையே. பாணித்ருத நவ நீத-கையில் வெண்ணெயை ஏந்தியவனே. பாண்டு ஸுதரதஸூத-அர்ச்சுனனின் தேர்ப்பாகனே; பார்த்த சாரதியே.

(2) வைத-பழித்த. சிசுபாலன்-தமகோஷன் எனுஞ் சேதிநாட்டரசனுக்கும் வசுதேவன் தங்கை சுருதசிர வைக்கும் பிறந்தவன்; விஷ்ணுவின் துவாரபாலகர்க ளில் ஒருவன்; கண்ணனுற் கொல்லப்பட்டவன். ஈந் தனை-கொடுத்தாய். புல்லன்-கண்டாகனன்; ஒரு சிவ பக்தனானவசுரன்; இவன் விஷ்ணுவின் நாமம் காதிற் படாவண்ணம் செவிகளின் மணியை அணிந்துகொண்டு திரிந்து முடிவில் விஷ்ணுவாலேயே வைகுந்தப் பதவி அடைந்தவன். வீடு-மோட்சம். சங்கதர-சங்கு ஏந்திய வனே.சடகோப பரகால பரிபடித-நம்மாழ்வார் திருமங்கை யாழ்வார் ஆகியோரால் பாடப்பெற்றவனே. ச்யாமளசரீர-கரிய திருமேனியை யுடையவனே. சசிதரணிநயந-சந்திர சூரியர்களைத் திருக் கண்களாகப் பெற்றவனே. புதசன விநுதபத நளின-தேவர்களும் புலவர்களும் வணங்கும் தாமரை இதழொத்த திருவடியோனே. சதமகமதச்சேதந -இந்திரன் மதத்தைத் தொலைத்தருளியவனே. பங்கஜ தளாக்ஷ-செங்கமலர்க் கண்களை உடையவனே. பகநாசக-புள்ளின் வாய் கீண்டவனே. கிரீந்த்ர கரபாலித சமஸ்த புவந-குன்றம் ஏந்திய கையால் அகில உலகங்களையும் காத்தவனே.

(3) ஐம்பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி. மாசு-குற்றம்.மாமகள்-இலக்குமி.கீசகுலபதிமித்ர-ஸுக்ரீவனின் நண்பனே. கம்புநிபகந்தர-குடக்கழுத்து போன்ற திருக் கழுத்துடையவனே. ஸுகேது-தர்மத்திற்கு ஜயக் கொடி போன்றவனே. தநுஜாநாசந-அரக்கர்களை அழிப்ப வனே. கிரணமணிக்ருதஹார-ஒளிவீசும் ரத்நங்களாலான ஹாரத்தைஉடையவனே. கம்பீர புஜகலிதகேயூர-கம்பீர மான இரு கைகளிலும் அணியப்பெற்ற தோள் வளை களை யுடையவனே. வேதசார-வேதத்தின் ஸாரமான வனே. பாசதர ஸத்ருச-யமனுக்கு நிகரானவனே. அசு

ராந்தக-அசுரர்கட்கு யமனுயிருந்தவனே. மஹாசூர-அஸ் ஹாய சூரனே. பரம கருணுசாகர-பரம கருணைக் கடலாய் இருப்பவனே.

(4) வீடுமன்-சந்தனு மன்னனுக்குக் கங்கையினிட மாகப் பிறந்தவன்; காங்கேயன், தேவ விரதன், வீஷ் மன் எனப்படுவன்; இவன் வசுக்களில் ஒருவன். சமர்-யுத்தம். புவனம்-உலகம். ஆழி சக்கரம். உன்னத-நெடியோனே. கதாஹஸ்த-கதை எனும் ஆயுதத்தைத் திருக்கையில் ஏந்தியவனே. கோபிகாநந்தகர-ஆய்ச்சியர் களுக்கு இன்பம் பயந்தவனே. உத்தமத-உத்தமமான வஸ்துவை அளிப்பவனே. உத்தமோத்தம-புருஷோத்தமனே. மாதவ-இலக்குமி மணுளனே. உத்துங்க பீஷ்மக சுதா காந்த-மிகச்சிறந்த பீஷ்மகரின் திருமகளான உருக்கு மிணி நங்கையின் மணுளனே. கோவிந்த-கோவிந்தன் என்று அழைக்கப் பெற்றவனே. உக்ரகம்ஸாசுஹரண-கொடிய கஞ்சனை ஒரு நொடியில் கொன்றவனே. பந்ந காதிபசயந-ஆதிசேஷன்மேல் சயனித்திருப்பவனே. நாரா யண- ஸ்ரீமந் நாரயணு. பலராம-பலராமனே. தேவா நுஜ-பலராம தேவனுக்குப்பின் தோன்றலே.

(5) காலயவனன்-நாரதர் சூழ்ச்சியால் இவன் மதுரா புரி மேற்படையெடுத்து வருவதை முன்னரே உணர்ந்த கண்ணன், விசுவகர்மனுற் கடலிலே ஒரு பட்டணம் நிர்மாணஞ்செய்து அங்கே எல்லோரையும் போக்கிவிட்டு தாம் ஒருவருமே நிராயுதராக இவன் முன்வரக் கண்டு பின் தொடர அஞ்சினவன்போல முசுகுந்தன் துயின்று கொண்டிருந்த குகையின் உள்ளேசெல்ல, இவனும் பின் சென்று துயின்று கொண்டிருந்த முசுகுந்தனைக்கண்ணன் என்று உதைப்ப, அவன் விழித்துப் பார்க்க முசுகுந்தன் பெற்றிருந்த மகிமையால் பஸ்மமானவன். சீலகுணகண நாத-சீலம் முதலிய குணக்குவியலை உடைய நாதனே. சிகுரகுந்தளவாம-வளைத்த முன்னுச்சிமயிர்களால் அழகா னவனே. சேஷ கருடாபிவந்த-ஆதிசேஷன் கருடாழ் வான் ஆகியோரால் ஸேவிக்கப்பெற்றவனே. சீதகர முகசந்த்ர-குளிர்ந்த கிரணமுடைய சந்திரனை யொத்த திருமுகமண்டலத்தை உடையவனே. கீதோபதேச வா-கீதோப தேசத்தினுல் சிறந்தவனே. சிஷ்யார்யபதர்ச் சக-சிஷ்யன் ஆசார்யன் என்ற நிலையைக்காண்பிப்பவனே. பாலகுல கோபால-சிறுவர் கூட்டத்திற் கோபாலனுய்

நின்றவனே. பக்தஜந மந்தார-பக்தர்களுக்குக் கல்பக வ்ருக்ஷமானவனே. பாரதஸஹாய - பாரதயுத்தத்தில் ஸஹாயமாக இருந்தவனே. சௌரே - சூரஸேனரின் பேரனே.

## இரண்டாவது.

(1) மடு-குளம், ஆற்றினுட்பள்ளம். உடலம்-சரீரம். குருவம்ச பவதுஷ்ட ந்ருபவம்ச பீதிகர-கௌரவர்வமிசத்தில் பிறந்த அரசர்களின் கூட்டத்துக்குப்பயத்தை விளைத்தவனே. கோமள ரதாங்கபாணே-அழகான சக்கராயுதத்தைத் திருக்கையில் தரித்தவனே. குமுகுமிதம்ருகமத படீரக்ருதலேபந-மிகவும் பரிமளம் வீசுகின்ற கஸ்தூரிப் பூச்சை உடையவனே. ரகூத்தம-ரகுவமிசத்தில் உத்தமனாய் நின்று பிரகாசிப்பவனே. கரீந்த்ர வரத-கஜேந்திராழ்வானுக்கு வரதனாய் வந்தவனே. பசுரக்ஷணஸக்த-பசுக்களை மேய்த்துக்காப்பதில் முனைந்தவனே. வேதாந்த சாஸ்த்ரவேத்ய-வேதாந்த சாஸ்திரத்தால் அறியப்பெறுமவனே. வேணுயுதகரகமல-புல்லாங்குழல் ஏந்திய செந்தாமரைக்கையனே. விஜிதரிபுசய-சத்துருக்களை எல்லாம் வென்றவனே. விமல-தோஷங்கள் அற்றவனே. விஜயரதகூதமணி-பார்த்தனுக்குத் தேரூர்ந்த மாமணியே.

(2) இறை-உயர்ந்தோன், தலைவன். மாணி-திருக்குறளன். எச்சம்-யாகம். வாடம்-சுவர், மதில். இரவி-சூரியன். இரவி மைந்தன்-சூரியபுத்திரன், கர்ணன். மாகாந்தன்-லக்ஷ்மீபதி. கந்தவஹ சுதவாஹந-அநுமானை வாஹனமாய்க் கொண்டவனே. அச்யுத-அச்சுதன் என்று பேசப்பெற்றவனே. ஹ்ருஷீகேச-இருடீகேசனே, இந்திரியங்களைஎல்லாம் அடக்கி ஆள்பவனே. கமநீய கோபவேஷ-அழகான ஆயர்வேஷத்தை உடையவனே. காகுஸ்த்த-ககுஸ்த்தருடைய வமிசத்தில் தோன்றியவரே. வசுதேவ தேவகீசுதரத்ந-வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்தபுத்ர சிகாமணியே. கனகவஸ்த்ராலங்க்ருத-தங்கம் இழைத்த வஸ்த்ரத்தினால் அலங்கரிக்கப் பெற்றவனே. விந்த்யகிரி ஸத்ருச புஜயுகள-விந்தியமலையையொத்த இரு திருத்தோளனே. ப்ருந்தாரண்ய-பிருந்தாரணியத்தில் நித்ய வாஸம் செய்பவனே. மேதிநீஸம்ஸ்தாபக-தருமத்தை நிலைநாட்ட தரணியில் அவதரித்தவனே.

(3) செகம்-சகம், உலகம். செருக்கு-ஆங்காரம். சுகநாரதாதிமுநிஸேவ்ய-சுகர் நாரதர் முதலிய முநிவர்களால் ஸேவிக்கத்தக்கவனே. வைகுண்டேச- ஸ்ரீவைகுண்டம் எனும் லோகத்துக்கு ஸ்வாமியே. சுத்த ஸாத்விக-ரஜஸ், தமஸ் சற்றும் கலவாத சுத்த ஸாத்விகனே. ஆச்ருதஜநாதார-அடைந்த ஜனங்களுக்கு ஆதாரமானவனே. சுபவிபீஷண பாந்தவ-நல்ல விபீஷணனுக்கு உற்றபந்துவே. விகசிதமநோநளின பாஸ்கர-மலர்ந்த உள்ளத்தாமரைக்குச் சூரியனாய் விளங்குபவனே. வஷட்கார-வஷட்கார ஸ்வரூபியே, விஹகரத-பக்ஷிராஜனாகிய கருடனை ஊர்தியாக உடையவனே. விச்வமூர்த்தே-உலக உருவில் இருப்பவனே.

(4) சுருதி-வேதம். பில்லாதிபோல்லாசகர-ஆயர்தலைவர்கட்கு மகிழ்ச்சி அளித்தவனே. கோபிகா ஜார-ஆய்ச்சியர்களை மோஹித்து அடைந்தவனே. பீமாக்ரஜாபிவாத்ய-யுதிஷ்டிரர் வணங்கியவனே. பீத பாஞ்சால புத்ரீமாநத-பயந்த திரௌபதியின் மானத்தைக் கொடுத்தவனே. அபேதபேத வாக்யார்த்த கதித-அபேதம்என்றும், பேதம் என்றும் வாக்யார்த்தமாகப் பேசப்பெற்றவனே. வில்லிபுத்தூர் விஷ்ணு சித்த நிச்சிததத்வ-வில்லிபுத்தூரில் திருவவதரித்த பெரியாழ்வாரால் நிச்சயிக்கப்பெற்ற பரதத்வமானவனே. விஹிதப்ரம்ஹாதிரூப - விதிசிவனிந்த்ராதி ஸர்வரூப ஸர்வசரீரியே.

(5) அரவம்-பாம்பு. அவை-சபை. புவனம்-உலகம். பெரிய உருவம்-விஸ்வரூபம். துன்பு-துன்பம். மதுர-இனியவனே. ம்ருதுதரவசந-இனியவார்த்தை உடையவனே. நவநீதததிசோர-வெண்ணெய் தயிர் முதலிய திருடுவோனே. மதுசூதந-மது என்ற அரக்கனை அழித்தவனே. ஆதிகூர்ம-ஆதிகூர்மரூபியே. மதுராபுரீவாச-வடமதுரையில் வசிப்பவனே. மாநத-மானத்தையே தனமாகப் பெற்றவனே. மாரமண-லக்ஷ்மீநாதனே. மாரீசநீசாந்தக-மாரீசன்போன்ற நீசர்களை நிரஸித்தவனே. விதுரஸத்க்ருதாதித்ய-விதுரரால் நன்கு அதிதி ஸத்காரம் செய்யப்பெற்றவனே. விப்ரதநத - குசேலருக்கு ஐச்வர்யம் அளித்தவனே. அநித்ய விஷயாதி தூரகமந-அநித்யமான விஷயங்களுக்கு வெகுதூரம் செல்பவனே.

மூன்ருவது.

(1) உந்தி-கொப்பூழ். உன்னி-நினைத்து. ஆக்கள்-பசுக்கள். பிணித்து-கட்டி. பன்னரிய-சொல்லவரிதான. முழை-மலையினுட்குகை. நாணி-வெட்கி. பதமலர்-திருவடித் தாமரை. கன்னல்-கரும்பு, சருக்கரை. ஈர்ந்து-பிளந்து.

(2) வான்-ஆகாயம். மதி-சந்திரன். தம்பம்-தூண். வேதன்-பிரமன். கமலை-இலக்குமி.

(3) வதனம்-முகம். தமநியம்-பொன். மலர்மகள்-பெரியபிராட்டி. பொலம்-பொன், அழகு. தூசு-வஸ்திரம். கங்குல்-இருள், இரவு.

(4) கோபன்-இடையன். வேள்வி-யாகம். இஃகு-கரும்பு. அருத்திட-உண்பிக்க. தம்பதி-வதூவரர்கள்.

(5) அந்தணன்-குசேலமுனி. விளவு-விளாமரம்.

தமிழ்நாடு ... ... பக நிலையம்
18266
சென்னை 600 ...


ஜகன்மோகினி அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.